செய்தி வெளியீடு எண்.982 நாள்.13.11.2008

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 2007ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த சார்நிலைப் பணிகளுக்கான தேர்வுகள் நடத்தப்பட்டு, வணிகவரித் துறையிலுள்ள 79 உதவி வணிக வரி அலுவலர் (Assistant Commercial Tax Officer) காலிப்பணியிடங்களுக்கு இதுவரை 78 தனியர்கள் (individuals) தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 56 தனியர்களுக்கு முதற்கட்டமாக தற்போது நியமன ஆணைகள் வழங்கப்படுகின்றன. இவ்வாறு உதவி வணிக வரி அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ள 56 தனியர்களுக்கு மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திரு.சி.நா.மீ.உபயதுல்லா அவர்கள் இன்று (13/11/2008) தலைமைச் செயலகத்தில் நியமன ஆணைகளை நேரில் வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை அரசுச் செயலர் திரு. ராஜீவ் ரஞ்சன், இ.ஆ.ப., வணிகவரிகள் ஆணையர் திரு. த. ஜேக்கப், இ.ஆ.ப., இணை ஆணையர் (நிர்வாகம்) திரு தி.ந. வெங்கடேஷ், இ.ஆ.ப., மற்றும் உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9